**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
கொழும்பு
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 202-8500 ● தொலை நகல்: +94 (11) 243-7345
மின்னஞ்சல்: bickelce@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20231025

**இலங்கையில் பெண்களின் தலைமையிலான மீள்சுழற்சி முன்முயற்சிகளுக்கு முன்னோடியாக அமையும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) - சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சி பங்காண்மை**

உடனடி வெளியீட்டிற்காக
புதன்கிழமை, ஒக்டோபர் 25, 2023

ஊடக அறிக்கை

கொழும்பு, இலங்கை. ஒக்டோபர் 25, 2023 – சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) சமுத்திரப் பிளாஸ்டிக் குறைப்புச் செயற்பாடுகள் ஊடாக அமெரிக்காவும் குணதமின் எலிபன்ட் ஹவுஸ் ஒப் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சி (CCS) நிறுவனமும் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையின் (MOU) ஊடாக தங்களின் கூட்டமைப்பினைத் திடப்படுத்தியுள்ளன. மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பிரித்து வேறாக்குதல் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளுக்கு முக்கியத்துவமளிக்கும் பெண்களால் வழிநடத்தப்படும் இலங்கையின் முதல் பிளாஸ்டிக் மீள்சுழற்சி சேகரிப்பு வலையமைப்பையும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை மீட்டெடுத்தல் வசதியினையும் (MRF) நிறுவுவதே இவ்வொத்துழைப்பின் நோக்கமாகும்.

மாத்தறை திக்வெல்லயில் முதலில் தொடங்கப்பட்ட இப்பங்காண்மையானது, சோபா காந்தா சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் சமுதாய அபிவிருத்தி மன்றம் மற்றும் இலங்கையில் பிளாஸ்டிக் மீள்சுழற்சியில் முன்னணியிலிருக்கும் விரிதிஸ் பிரைவேட் லிமிடட் ஆகியவற்றின் உதவியுடன், 1175 கிலோ கிராம் பிளாஸ்டிக் கழிவுகளை வெற்றிகரமாக சேகரித்துள்ளது. அடிமட்டத்தில் இயங்கும் பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து, இம்முன்முயற்சியின் நோக்கெல்லையினை ஐந்து கரையோர மாகாணங்களின் ஊடே பரவலாக்குவதே குறிக்கோளாகும். மீன்பிடி சமுதாயங்களைச் சேர்ந்த, பொருளாதார ரீதியாக விளிம்பு நிலையில் வாழும் பெண்களை அடையாளம் கண்டு, அவர்களை வலுப்படுத்தி, முனைப்பான பிளாஸ்டிக் சேகரிப்பாளர்களாகவும் சுற்றாடல் வழிகாட்டுனர்களாகவும் அவர்களை நிலைமாற்றுவதையே இப்பங்காண்மைகள் நோக்காகக் கொண்டுள்ளன.

“இலங்கையுடன் கொண்டுள்ள நீண்ட கால உறவின் ஊடாக ஒத்துழைப்பின் நிலைமாற்றச் சக்தியில் ஐக்கிய அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளதென” USAID இலங்கை மற்றும் மாலைதீவு செயற்பணியின் பொருளாதார வளர்ச்சி அலுவலகத்தின் பணிப்பாளரான கிறிஸ்தோபர் பவர்ஸ் குறிப்பிட்டார். “இந்தப் பங்காண்மையானது நம்பிக்கையினைப் பிரதிநிதித்துவம் செய்வதுடன், வெறுமனே சுற்றாடல் பாதுகாப்பிற்கான வாக்குறுதியினை மாத்திரம் வழங்காது, மாற்றத்திற்குத் தலைமை தாங்குவதில் பெண்களின் வகிபாத்திரத்தினையும் பற்றிப் பிடிக்கின்றது.” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

John Keells Group - Confidential

சீசீஎஸ்சினைச் சேர்ந்த ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் நுகர்வோர் உணவுத் துறைத் தலைவரான தமிந்த கம்லத் பின்வரும் கருத்தினை வழங்கினார், ''பொறுப்புவாய்ந்த பிளாஸ்டிக் கையுதிர்ப்பு மற்றும் கழிவு முகாமைத்துவ முன்னெடுப்புகளுக்கான குணதமின் எலிபன்ட் ஹவுசின் திடசங்கற்பமிக்க அர்ப்பணிப்பானது சமுதாயத்தினுள் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது. தொலைநோக்குமிக்க இந்தப் பங்காண்மையின் மூலம், எமது நோக்கமானது பிளாஸ்டிக் சேகரிப்பில் எமது முயற்சியினை அதிகரிப்பது மாத்திரமன்றி, பெண்களை வலுவூட்டி, மீண்டெழுந்தன்மையுடன் சுற்றாடல் ரீதியாகப் பிரக்ஞைமிக்க இலங்கையினைப் போஷிப்பதுமாக இருக்கும். இந்த ஒத்துழைப்பானது, நிலைபேறான தன்மையும் பெண்களின் வலுவூட்டலும் ஒன்று சேர்கையில், சாதகமான மாற்றத்திற்கான சாத்தியத்தினை எடுத்துக்காட்டும் தனித்துவமான மற்றும் வலிமைமிக்க கூட்டுச் சக்தியினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது."

இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, மீள்சுழற்சிக்குரிய பொருள்களைச் சேகரிக்கும் ஆற்றலுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட பெண்கள், இலாபமிக்க மீள்சுழற்சிக்கான வாய்ப்பினைக் கொண்டுள்ள குறிப்பிட்ட வகையான கழிவுகளை – பிளாஸ்டிக் மற்றும் உலோகங்கள் - பாதுகாப்பாகச் சேகரிப்பதற்காகப் பயிற்றுவிக்கப்பட்டுத் தயார்படுத்தப்பட்டனர். சமுத்திர பிளாஸ்டிக் குறைப்பு, குணதமின் எலிபன்ட் ஹவுஸ் மற்றும் விரிதிஸ் ஆகியவற்றின் பின்புல ஆதரவுடன் இப்பெண்களுக்குக் கையுறைகள், தராசுகள் மற்றும் சேகரிப்புப் பைகள் போன்ற அவசியமான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனையடுத்து, அடிமட்ட அமைப்புக்கள் சேகரிக்கப்பட்ட கழிவுகளை அவற்றுக்குரிய தனித்துவமான சேகரிப்பு மையங்களில் பெற்றுக்கொள்ளும்.

மீள்சுழற்சிக் கட்டத்தின் போது பெறுமதிமிக்க பிளாஸ்டிக் மற்றும் உலோகக் கழிவுகள் வினைத்திறனுள்ள முறையில் செயன்முறைப்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பிரதான பொறுப்பினை விரிதிஸ் ஏற்கின்றது. பெண்களுக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்புக்களுக்கு பதிலாகப் ஊதியம் வழங்கப்படுகின்றது. இந்த மாதிரியானது ஒரு சுழற்சிப் பொருளதாரத்தினை எடுத்துக்காட்டுகின்றது: நுகரப்படுகின்ற பிளாஸ்டிக் பொருட்களும் உலோகங்களும் பெறுமதிச் சங்கிலியினுள் மீள அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதனால் மாசாக்கம் கணிசமாகக் குறைக்கப்பட்டு, அதன் மூலம் இடைவெளி நிரப்பப்பட்டு, ஒரு சுழற்சிப் பொருளாதாரத்திற்கு ஒரு படி நெருக்கமாக இலங்கை நகர்த்தப்படுகின்றது. இந்த முன்னெடுப்பினால் ஏற்படும் பொருளதார நன்மைகளுக்கு அப்பால், இப்பெண்களின் வருமானமீட்டல் அவர்களின் குடும்பங்களுக்கும் பரந்த சமுதாயத்திற்கும் நேரடியாக நன்மை பயப்பதால், உள்நாட்டுப் பொருளாதாரமும் வலுப்படுத்தப்படுகின்றது. மேலும், இப்பெண்களின் முனைப்பான ஈடுபாடு காரணமாக, இவர்கள் தங்களின் அயலாண்மையினுள் சூழலியல் பிரக்ஞைமிக்க நடைமுறைகளை மேம்படுத்துவதில் ஒரு முக்கியமான வகிபாகத்தினை வகிக்கின்றனர்.

இது வெறுமனே பிளாஸ்டிக் சேகரிப்பாக மாத்திரம் அமையாது அதையும் தாண்டிய விடயங்களையும் இந்த ஒத்துழைப்பின் பிரதிநிதித்துவப்படுத்துவதே இதன் பிரதானமான அம்சமாகும். இது நிலைபேறான பொருளாதாரங்களை நோக்கிய ஓர் உபாயமார்க்கமிக்க நகர்வு என்பதுடன் பெண்கள் எத்துறைகளில் வரலாற்று ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ளனரோ அத்துறைகளில் அவர்களை மீள நிலைப்படுத்துவதற்கான பிரக்ஞைமிக்க முயற்சியுமாகும். சமுதாயத்தில் உள்ள பெண்களுக்காக இது பொருளாதார மீண்டெழுந்தன்மையினையும் வலுவூட்டல் பாதைகளையும் உருவாக்குகின்றது. இதுவே இச்சமுதாயங்களுக்கு மிகவும் தேவைப்படுகின்றது.

USAID சமுத்திரப் பிளாஸ்டிக் குறைப்புச் செயற்பாடு அதன் ஐந்து வருடக் கவனக் குவிப்புடன் சுற்றாடல் பிளாஸ்டிக் பொருட்களைக் குறைப்பதற்காக ஆழமான கடப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன் திண்மக் கழிவு முகாமைத்துவ நடைமுறைகளை அதிகரிப்பதையும் இலங்கையிலும் மாலைதீவிலும் மீள்சுழற்சி முன்னெடுப்புக்களை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஒத்துழைப்பானது USAIDஇன் பரந்த பணிநோக்கின் பண்புருவாகக் காணப்படுகின்றது: சமூகபொருளாதார வலுவூட்டலை உந்திச் செலுத்தும் அதேவேளை, சுற்றாடல் வழிகாட்டலையும் இது பற்றிப் பிடிக்கின்றது.

எலிபன்ட் ஹவுஸ் அதன் 150 வருடப் பாரம்பரியத்துடன், மிகவும் போஷிக்கப்படுகின்ற ஒரு வியாபாரச் சின்னமாக விளங்குவதுடன் அதன் மேல் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினாலும் சமூக நலனோம்புகைக்கான அதன் கடப்பாட்டினாலும் இலங்கைக் குடும்பங்களில் அதன் பெயர் ஆழமாகப் பதிந்துள்ளது. எலிபன்ட் ஹவுசின் பெருநிறுவனச் சமூகப் பொறுப்பின் (CSR) அங்கமாக குணதமின் எலிபன்ட் ஹவுஸ் திகழ்கின்றது. இது சமூக நலனோம்புகைக்கென வடிவமைக்கப்பட்ட பரந்த வீச்சிலான முன்னெடுப்புக்களைக் கொண்டுள்ளது. இக்கருத்திட்டமானது, கழிவு முகாமைத்துவத் தூணின் கீழ் வருகின்றது. இது சமுதாயம் மற்றும் நிலைபேறான வளமிடல் தூண்களுடன் சேர்ந்து, நிலைபேறான மற்றும்

பொறுப்புமிக்க நடைமுறைகளை நோக்கிய குணதமின் எலிபன்ட் ஹவுசின் பூரணமான அணுகுமுறையினை உருவாக்குகின்றது.